Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 01

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. "தண்டாமரையினுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம்..." இங்கு மண்டுகம் எனப்படுவது
   - i. குளிர்ச்சி
   - ii. தவளை
   - iii தாமரை
   - iv பருகாது
2. "வண்டோ கானத்திடையிருந்து வந்து..." இங்கு கானம் என்று குறிப்பிடப்படுவது
   - i. காடு
   - ii. தாமரை
   - iii சினம்
   - iv குளம்
3. "அறியார் புல்லர் நல்லோரை..." என்பதில் புல்லர் எனப்படுவோர்
   - i. தீயவர்
   - ii. அறிவுடையோர்
   - iii அறிவற்றவர்
   - iv பெரியோர்
4. "கணனிகள் இயங்கியது" என்பது
   - i. எண்வழு
   - ii. காலவழு
   - iii இடவழு
   - iv திணைவழு
5. பின்வருவனவற்றுள் வாக்கியமாக அமைவது
   - i. பச்சைப்சேலென்ற வயல்
   - ii. கயிற்றினை அறுத்த மாடு
   - iii நான் பாடம்படித்தேன்
   - iv மேலே மேலே

பகுதி 2

01. பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக

1. "மடைத்தலையில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்ற தொடரின் எழுவாய் பயனிலையை குறிப்பிடுக
2. "கண்டே களித்தங்கு உறவாடி தம்மில் கலப்பர் கற்றோரே" என்ற தொடரை கொண்டுகூட்டி மீண்டும் எழுதுக.
3. விவேகசிந்தாமணி அறிவற்றவர் இயல்பாக யாது கூறுகின்றது?
4. வெற்றிவேற்கை என்ற நூலை எழுதியவர் யார்? அந்த நூலுக்கு வழங்கும் வேறுபெயர் என்ன?
5. "தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை" என்ற அடியை சந்திபிரித்தெழுது

02. பின்வரும் பாடலை படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை தருக

1. கணக்காயரில்லாத வூரும் பிணக்கறுக்கு
   மூத்தோரை யில்லா வவைக்களனும் பாத்துண்ணுந்
   தன்மையிலாள ரயலிருப்பு மிம்மூன்று
   நன்மை பயத்த லில

   - i. மேற்குறித்த பாடல் இடம்பெற்ற நூலை எழுதியவர் யார்?
   - ii. அந்த நூல் திரிகடுகம் என பெயர் பெற காரணம் என்ன?
   - iii. மேலே இடம்பெற்ற பாடல் நன்மை தராதவையாக எவற்றை குறிப்பிடுகின்றது?
   - iv. திரிகடுகங்களும் எவை?
   - v. திரிகடுகம் என்ற நூல் தோன்றிய காலப்பகுதி என்ன?